# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, விதுரர்களினதும் அனாதைகளினதும் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்

---

(1998, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 7.75 தபாற் செலவு : ரூபா 3.50

# 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, விதுரர்களினதும் அனாதைகளினதும் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 10/90 / 4269

**ஆயுதந்தாங்கிய படைகளின் இறந்தவர்களான உறுப்பினர்களின் விதுரர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒய்வூதியங்கள் அளிக்கும் செயற்றிட்டமொன்றைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, விதுரர்களினதும் அனாதைகளினதும் ஒய்வூதியத்திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

விதுரர்களினதும் அனாதைகளினதும் ஒய்வூதியத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

2. ஒழுங்குவிதிகளுக்கிணங்க, (இதனகத்துப்பின்னர் "ஒய்வூதியத் திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விதுரர்களினதும் அனாதைகளினதும் ஒய்வூதியத்திட்டமொன்று, அத்தகைய ஒய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாகவுள்ள அல்லது உதவுதொகை செலுத்துநர்களாகக் கருதப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் இறந்த உறுப்பினர்களின் விதுரர்களுக்கும் அனாதைகளுக்கும் ஒய்வூதியங்கள் அளிப்பதற்கென தாபிக்கப்படலாம்.

ஒய்வூதியத் திட்டத்திற்கான உதவுதொகை செலுத்துநர்கள்.

3. (1) 1983 யூலை 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வந்தவரும் அத்துடன் அத்தேதியின் பின்னர் அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்திருக்கின்றவரான ஆளெவரும் விதித்துரைக்கப்பட்ட தேதிக்குமுன்னர் ஒய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராகத் தெரிவுசெய்யலாம் :

ஆயினும், அத்தகைய ஆள், விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னரும், அத்துடன் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தெரிவொன்றைச் செய்யாமலும் இறக்குமிடத்து, அவள், கணவன் ஒருவரை அல்லது பிள்ளையொன்றை அல்லது ஒரு கணவனையும் பிள்ளையையும் அல்லது ஒரு கணவனையும் பிள்ளைகளையும் விட்டுச் சென்றால், அவள் ஒய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராகத் தெரிவு செய்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2-டீ 049828 -1,100 (98/09)

(2) 1983 ஓகத்து 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆயுதங்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வந்துள்ள அல்லது வருகின்ற ஆளெவரும் அவள் ஆயுதங்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வரும் தேதியிலிருந்து ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராக ஆதல் வேண்டும் :

ஆயினும், அத்தகைய ஆளெவரும் இச்சட்டம் ஆரம்பமாகும் தேதிக்கு முன்னர் இறந்துள்ளவிடத்து, அவள், ஒரு கணவனை அல்லது பிள்ளையை அல்லது ஒரு கணவனையும் பிள்ளையையும் அல்லது ஒரு கணவனையும் பிள்ளைகளையும் விட்டுச் சென்றால், அவள் ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆளெவரும் இப்பிரிவின் (1) ஆம் அல்லது 2 ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தின்கீழ் ஓய்வூதியத்திட்டத்திற்கான உதவுதொகை செலுத்துநராகக் கருதப்படுமிடத்து, அத்தகைய ஆளின் மரணச்சொத்தை நிர்வகிக்கும் ஆள் விடயத்திற்கேற்ப 1983 ஓகத்து 1 ஆம் தேதி தொடக்கம் அவள் இறக்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு அல்லது அவள் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வந்த தேதி தொடங்கி அவள் இறக்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு உதவுதொகைகளின் எல்லா நிலுவைகளையும் அவற்றின்மீது ஆண்டொன்றுக்கு நாலு சதவீதப்படி வட்டியுடன் ஓய்வூதியத்திட்டதிற்குச் செலுத்துதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட தெரிவு இறுதியான தாதல் வேண்டும்.

சேவையில் தொடர்ந்திருக்கின்ற அல்லது ஓய்வு பெற்ற அல்லது இறந்த உறுப்பினர்களையும் உள்ளடக்குவதற்கு ஓய்வூதியத் திட்டத்தை விரிவாக்கல்.

4. (1) இச்சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும் 1983 யூலை 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வந்தவரும் அத்துடன் அத்தேதியின் பின்னர் அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்து சேவையாற்றியவரும் அத்துடன் அதனையடுத்து ஓய்வுபெற்ற வருமான ஆளெவரும் விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராகத் தெரிவுசெய்யலாம் :

ஆயினும், 1983 யூலை 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வந்தவரும் அத்தேதியின் பின்னர் அத்தகைய உறுப்பினராக தொடர்ந்து சேவையாற்றியுள்ளவருமான ஆளெவரும் இச்சட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இறந்துள்ளவிடத்து அல்லது இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தெரிவொன்றை செய்யுமுன்னர் இறக்கின்றவிடத்து அத்தகைய ஆள் ஒரு கணவனை அல்லது பிள்ளையை அல்லது ஒரு கணவனையும் பிள்ளையையும் அல்லது ஒரு கணவனையும் பிள்ளைகளையும் விட்டுச் சென்றால், அவள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராகத் தெரிவு செய்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆளெவரும் இப்பிரிவின்கீழ் உதவுதொகை செலுத்துநராக வருவதற்குத் தெரிவுசெய்யுமிடத்து அல்லது இப்பிரிவின்கீழ் ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாக வருவதற்குத் தெரிவுசெய்துள்ளதாகக் கருதப்பட்ட ஆட்களின் விடயத்தில் இறந்தவரான அத்தகைய ஆளின் மரணச் சொத்தை நிர்வகிக்கும் ஆள், விடயத்திற்கேற்ப, 1983 ஓகத்து 1 ஆம் தேதி தொடக்கம் விடயத்திற்கேற்ப தெரிவுசெய்த, ஓய்வுபெற்ற அல்லது இறந்த தேதி வரையிலான காலப்பகுதிக்கு உதவு தொகைகளின் எல்லா நிலுவைகளையும் அவற்றின் மீது ஆண்டொன்றுக்கு நாலு சதவீதப்படி வட்டியுடன் ஓய்வூதியத்திட்டத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட தெரிவொன்று இறுதியானதாதல் வேண்டும்.

ஓய்வூதியத் திட்டத்துக்கான ஒழுங்கு விதிகள்.

5. (1) பின்வருவனவற்றிற்கான ஒழுங்குவிதிகள் ஆக்கப் படலாம் :—

(அ) ஓய்வூதியத்திட்டத்தைத் தாபிப்பதற்கும் ஒழுங்கு படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் அத்துடன் முகாமை செய்வதற்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஆ) இறந்தவர்களான உதவுதொகை செலுத்துநர்களின் விதுரர்களும் பிள்ளைகளும் எந்த நிபந்தனைகளுக் கமையவும் எந்தச் சூழ்நிலைகளிலும் அத்துடன் எந்த மட்டுப்பாடுகளுக்கமையவும் ஓய்வூதியங்கள் அளிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவார் களோ அந்த நிபந்தனைகளையும் சூழ்நிலைகளையும் மட்டுப்பாடுகளையும் விதித்துரைத்தல் ;

(இ) உதவுதொகை செலுத்துநர்களால் விவரங்கள் கொடுத்துதவப்படுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஈ) உதவுதொகை செலுத்துநர்களால் ஒய்வூதியத்திட்டத்திற்கு செய்யப்படவேண்டிய உதவுதொகைகளை நிர்ணயித்தல் ;

(உ) ஒய்வூதியத்திட்டத்திற்கு அரசாங்கத்தால் உதவு தொகைகள் எவையும் செலுத்தப்படவேண்டியிருந்தால் அவற்றை நிர்ணயித்தல் ;

(ஊ) உதவுதொகை செலுத்துநர்களின் சம்பளத்திலும் படிகளிலுமிருந்து அல்லது அவர்களுக்கு அல்லது அவர்கள் தொடர்பில் வருமதியாகவுள்ள வேறு பணத்திலிருந்து உதவுதொகைகளின் கழிப்பனவுக்கு அதிகாரமளித்தலும் அத்துடன் அத்தகைய கழிப்பனவுகளை செய்வதற்கான நடவடிக்கை முறையை விதித்துரைத்தலும் ;

(எ) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் எந்தக் காலப் பகுதிகள் தொடர்பில் உதவுதொகை எதனையும் செலுத்தியிராதிருக்கின்றாரோ அந்தக் காலப்பகுதிக்கான உதவுதொகைகள் அறவிடப்படவேண்டிய முறையை விதித்துரைத்தல் ;

(ஏ) உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் விதுரருக்கும் அத்துடன் அத்தகைய உதவுதொகை செலுத்துநர் ஒன்றுக்கு மேற்பட்ட விவாக ஒப்பந்தம் செய்திருக்குமிடத்து அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் பிள்ளைகளுக்குமிடையில் ஒய்வூதியத்தின் பங்கீட்டிற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஐ) உதவுதொகை செலுத்துநரால் ஒய்வூதியத்திட்டத்திற்குச் செய்யப்பட்ட உதவுதொகைகளைத் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுவதற்கு அதிகாரமளித்தல் ;

(ஒ) உதவுதொகை செலுத்துநர் ஒருவரால் ஒய்வூதியத் திட்டத்திற்குச் செய்யப்பட்ட உதவுதொகைகள் எந்தச் சூழ்நிலைகளிலும் அத்துடன் எந்த நிபந்தனைகளுக்கமையவும் மீளளிக்கப்படலாமோ அந்தச் சூழ்நிலைகளையும் நிபந்தனைகளையும் விதித்துரைத்தலும் அவ்வாறு மீளளிக்கப்படும் உதவுதொகைகள் மீதான வட்டியின் கொடுப்பனவுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஓ) இறந்தவர்களான உதவுதொகை செலுத்துநர்களின் விதுரர்களுக்கும் பிள்ளைகளுக்கும் செலுத்தப்படற் பாலதான ஓய்வூதியங்களைக் கணிப்பிடும் விதத்தை விதித்துரைத்தல் ;

(ஔ) ஓய்வூதியத்திட்டத்தின் நிர்வாகத்திற்கும் முகாமைக்கும் இடைநேர்விளைவான அல்லது அதனோடு தொடர்புடைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி ஒரு கருமம் தொடர்பில் அவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதி, 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்திலுள்ள அதே கருமம் தொடர்பில் செய்யப்பட்டவற்றையொத்த ஏற்பாட்டை ஆக்கலாம்.

ஓய்வூதியங்கள் முதலியன திரட்டு நிதியத்தின் மீது பொறுப் பொன்றாதல்.

6. இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான எல்லா ஓய்வூதியங்களும் மீளளிப்புகளும் மீளளிப்புகள் மீதான வட்டியும் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பொன்றாதல் வேண்டும்.

உதவு தொகைகள் முதலியன சாட்டுதல் செய்யப்படுதலோ நடுக்கட்டல் செய்யப்படுதலோ ஆகாது என்பது.

7. இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான உதவுதொகை, ஓய்வூதியம், மீளளிப்பு அல்லது மீளளிப்பொன்றின் மீதான வட்டி எதுவும் எத்தன்மையதுமான ஏதேனும் தனிசுக்காக அல்லது உரிமைக் கோரிக்கைக்காக அல்லது அது தொடர்பில் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்வையின் அல்லது கட்டளையின் நிறைவேற்றுகையில் சாட்டுதல் செய்யப்படற்பாலதாதலோ அல்லது மாற்றப்படற்பாலதாதலோ அல்லது நடுக்கட்டல் செய்யப்படுவதற்கு அல்லது பற்று வைக்கப்படுவதற்கு அல்லது விதிப்பனவு செய்யப்படுவதற்குப் பொறுப்பாதலோ ஆகாது.

பொது நிருவாக அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் என்பது.

8. (1) பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அது, வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்து ரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடிய வாறான விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படவேண்டிய தேதியானது, கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

9. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"உதவுதொகை செலுத்துநர்" என்பது ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநராக இருக்கின்ற அல்லது இருக்கின்றவராகக் கருதப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் என்று பொருள்படும் ;

"ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்" என்பது —

(அ) பெண்ணொருவராக இருந்தவண்ணம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படைப்பிரிவின் அலுவலர் ஒருவராக அல்லது படைவீரர் ஒருவராகவுள்ள ; அல்லது

(ஆ) பெண்ணொருவராக இருந்தவண்ணம் இலங்கைக் கடற்படையின் நிரந்தரப் படைப்பிரிவின் அலுவலர் ஒருவராக அல்லது கடலோடி ஒருவராகவுள்ள ; அல்லது

(இ) பெண்ணொருவராக இருந்தவண்ணம் இலங்கை வான்படையின் நிரந்தரப் படைப்பிரிவின் அலுவலர் ஒருவராக அல்லது வான்படை வீரர் ஒருவராகவுள்ள.

ஆளொருவர் என்று பொருள்படும் ;

ஆனால் —

(i) இராணுவச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அலுவலர் ஒருவராக அல்லது படைவீரர் ஒருவராக இருப்பவராகக் கருதப்பட்ட வாறான அத்தகைய எவரேனும், நிரந்தர ஒதுக்குப் படையின் தொண்டர் படைப்பிரிவின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் அலுவலரை அல்லது படைவீரரை ; அல்லது

(ii) கடற்படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நிரந்தர கடற்படையின் அலுவல ரொருவராக அல்லது கடலோடி ஒருவராக இருப்பவராகக் கருதப்பட்டவாறான அத்தகைய எவரேனும், நிரந்தர கடற்படை ஒதுக்குப் படைப் பிரிவின் தொண்டர் கடற்படையின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் அலுவலரை அல்லது கடலோடியை ; அல்லது

(iii) வான்படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நிரந்தர வான்படையின் அலுவலரொருவராக அல்லது வான்படைவீரராக இருப்பவராகக் கருதப்பட்டவாறான அத்தகைய எவரேனும், நிரந்தர வான்படை ஒதுக்குப் படைப் பிரிவின் தொண்டர் வான்படையின் அல்லது தொண்டர் வான் படை ஒதுக்குப் படைப் பிரிவின் அலுவலரை அல்லது வான்படை வீரரை

உள்ளடக்கமாட்டாது ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

*இச்சட்டத்தின் கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**10.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 1983 ஒகத்து 1 ஆம் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியானது, அத்தேதியிலிருந்து அல்லது அடுத்துறும் ஏதேனும் திகதியிலிருந்து பயனுறுவதாகக் கருதப்படலாம்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.